உ

கணபதி துணை.

---

# ஸ்ரீ மெய்யப்பசுவாமிகள்

## சரித்திர சங்கிரகமும்,

# பதிற்றுப்பத்தந்தாதியும்.

—(:0:)—

இரண்டாம் பதிப்பு.

இவை

## ஸ்ரீவன்றொண்டரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

## ராம.சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று,

---

மேற்படி சுவாமிகளின் சேஷ்டபௌத்திரர்

## மெ.மெ. மெய்யப்பசெட்டியாரவர்களால்,

---

மதுரை

ஸ்ரீ ஞானசம்பந்த விலாஸ் பிரஸில்

அச்சிடப்பெற்றது.

—— [illegible]

[illegible]

MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHAIYAR LIBRARY? TIRUVANMIYUR, MADRAS?

இந்நூல், இற்றைக்கு முப்பது வருஷங்களுக்குமுன் அச்சிடப்பெற்று, வெளிவந்து நாளடைவிலே படிக்கவிரும்பினவர்களுக்குக் கொடுக்கப்பெற்று, முழுதுஞ் செலவாகி விட்டபடியால் இப்பாட்டுடைத்தலைவர்களாகிய ஸ்ரீ மெய்யப்பசுவாமிகளின் சேஷ்ட பௌத்திரராகிய மெ. மெ. மெய்யப்பசெட்டியாரவர்கள் இதனை மேலும் அச்சிடவேண்டுமென்று விரும்பியதை நோக்கி, இரண்டாமுறையும் அவ்வாறு செய்யப்பெற்றது.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

ஸ்ரீமெய்யப்பசுவாமிகள் பௌத்திரகுமாரரும்
இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவருமாகிய
அரு. ராம.
திருநாவுக்கரசு செட்டியாரவர்கள்
இயற்றியது.

---

பொன்மாது கலைமாது புகழ்மாது மெய்ஞ்ஞான புனிதமாது
முன்மாதர் நிறைமதுரை முறையறிந்தபெயல் லிலையக்கடையா முனிவர் கோட
என்யானைப் பிரானகமென் றெந்தையெனுமெய் யப்பசுவா மியின்னருட் கேய்ந்த
நன்மலைப் பிள்ளைப்பத் தந்தாதி சரிதமுட னயப்பச் செய்தான்.

தென்னலைநாட்டுக் காரைத் திருநகரிற் கல்விநலஞ் சிறப்ப வாழ்வோன்
நன்னயமா மணிநலத் திராமனுதப் பெரியோ னயந்து பெற்ற
தன்மைபொருந்து மெய்ஞ்ஞானன் பின்னைபாப் பாட்டியெனுந் தனிப்போர் பூண்
பொன்னகரப் பாந்தோழனின் மெய்ஞ்ஞானத் திற புணர்த்தும் புனித

என்போன்ற சிற்றறிவோர்க் கெளிதாகப் பலநூல்க ளிசைத்தன் பே
நன்பார்ந்த பெற்றுயிரும் படியோதி மைப்புரிய ஞானமேலான்செம்
பொன்போன்ற சடைக்கொன்றைப் புதுமாலை யணியராமன் பூம்பா
லன்பார்ந்த கனிமனத்தான் சொக்கலிங்க தேசிகென் மெய்யறிவன்

கணபதிதுணை.

# ஸ்ரீமெய்யப்ப சுவாமிகள் சரித்திர சங்கிரகம்.

ஸ்ரீமெய்யப்ப சுவாமிகள், பாண்டிநாட்டிலே புராதன சிவஸ்தலங்களுள் ஒன்றாயதும், மதுப்பிரியமுனிவர் முதலிய ஆன்றோர்கள் பூசித்துப்பேறுபெற்ற சிறப்புடையதுமான கோயிலூரென்னுஞ் சமிவனாரணியப்பெயர்பெற்ற அதன் கீழ்த்திசையிலுள்ள காரைக்குடியிலே, தனவைசியர் குலத்திலே இளையாற்றங்குடிக்கோயிற் கட்டிலைச் சார்ந்த வைசியர்மேலே, மெய்யப்பசெட்டியாரென்னும் புண்ணியசீலர் புத்திரவர்களிற் பிறந்துவந்த பெருந்தகைக்கோர் நாமமுஞ் [illegible] தது வைத்துப் போற்றினார்கள்.

இவர்கள், பாலியப்பருவத்தே, [illegible] என்றருளியபடி இளமையிலேயே [illegible] பலதுறைகளையுந் தெளிந்து, [illegible] இவர்கள் ... நன்கு ... ஒழுகி வந்தார்கள்.

இவ்வாறொழுகும் வயசியத்தின்மேற் சிலநாள் இல் ... ஒரு நகரொன்றிற்கொண்டு அதிலேவைப்பதற்காக, அக்காலத்திற் ... வைசியர் ...த்தில் வந்து வசித்துத், துறவிலும் நல்லொழுக்கங்களிலும் பிரசித்திபெற்றுக் கோயிலூரிலிருந்த துறவுசுவாமிகளிடத்து விளங்கிய சீலங்களைக்கண்டு பிரீதியுடையர்களாய், அவர்களிடத்திற் பத்துறவு நூல்களைப்பயின்றுவந்தார்கள். அந்நாளில் இடைஇடையே சிதம்பராதி சிவக்ஷேத்திர யாத்திரைசெய்து சிலநாளங்கங்கே வசித்து, சமுசார துக்க நிவர்த்தியிற் பேராசையுடையர்களாய்ச் சிவகைங்கரியஞ் செய்துவந்தார்கள்.

இவர்களுக்கு, அந்நாளிற் சிலகாலம் ஒரு வயிற்றுநோயிருந்தது. அக்காலத்திலே பாண்டிநாட்டுச் சிவக்ஷேத்திர யாத்திரைசெய்யக்கருதி முதலில் துவாதசாந்த புரமாகிய மதுராபுரிக்குவந்து, பொற்றாமரையிலே ஸ்நானஞ்செய்து ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேச தெரிசனஞ்செய்துகொண்டு சிலநாளங்கிருந்தார்கள். அப்போது வயிற்றுநோய் சாந்தமானது தெரிந்து, இத்தலத்திலே நமக்குத்திருவருள் துணைசெய்யுமென்று போதுவகையான் மதித்துக்கொண்டு, தாங்கருதி வந்தபடி ஏனையசிவஸ்தலங்களுக்குஞ் செல்லுங்கால், வயிற்றுநோய் மீளவும்வந்தது. வரினும் உத்தேசித்தபடி அத்தலங்களைத்தெரிசித்துக்கொண்டுமீட்டும் மதுரைக்குவந்தார்கள். வந்தவுடன் அவ்வயிற்றுநோய் சாந்தமாயது. அது நோக்கி அம்மதுராபுரியில் மேலுஞ்சிலநாள் வசிக்குங்கருத்துடையவர்களாயிருந்தும், உடன்வந்த நண்பர்கள் கருத்துக்கிணங்கி அம்மதுராபுரியினின்றும் ஒருவாறுகச்சென்று கோயிலூரையடைந்தார்கள்.

அப்போது இடையிலே சாந்தமான வயிற்றுநோய் முன்போலவர, அதுகண்டு இஃதென்னையோ வென்றுலோசித்து, இவ்வயிற்றுநோய்க்குத்தான், அநாதிதொடுத்துத் தொடர்ந்துவந்த பிறவிநோய்க்குத்தான், பரம அவுழ்தம், துவாதசாந்தபுரமாகிய மதுராபுரிவாசமேயென்று துணிந்து, பசுவைநோக்கிய கன்றுபோல மதுராபுரியைநோக்கி அளவுகடந்த அன்பும் ஆராமையும் பொருந்தக்கண்ணீரும் கம்பலையுமுடையவர்களாய் "எம்பிரானெனையென்று" கொளுங்கொலோ என்னும் வேண்டுகோளுடையர்களாய்ச்சென்று மதுராபுரிக்கு வந்துபொற்றாமரை ஸ்நானஞ்செய்து சித்திவிநாயக ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுர தெரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்தார்கள். திருவருளினாலே வயிற்றுநோய் முற்றும் நீங்கிவிட்டது. அதனாலும், முன்னுள்ள அதிவிருப்பத்தாலும், சீவ பரியந்தம் இம்மதுராபுரியெல்லையைவிட்டுநீங்குவதில்லையென்று உறுதியான விரதமேற்கொண்டு, குடும்பப்பற்றுமுற்றும்நீக்கிச்சிவதீக்ஷாதி சிவசமஸ்காரமுற்றும்பெற்று அம்மதுராபுரி நிவாசராய் வீற்றிருந்தருளினார்கள்.

அப்படி வசித்துவருங் காலமுழுதுந் தினந்தோறும் பொற்றாம

கரையிலும்* புறத்தொட்டித் தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து, ஜெபதபத்தியானபூசாதி சிவநியமங்களை முடித்துக்கொண்டு, திருவனந்தல் முதலிய ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேச பூசாகாலங்களெல்லாந் தவறாது தரிசித்து, உச்சிக்காலத்துக்கு முன் மீட்டும் அத்தீர்த்த ஸ்நானஞ்செய்து, உச்சிக்கால தரிசனமுஞ்செய்தலும், இதற்கிடையே அநேகபிரதக்ஷிண நமஸ்கார பாராயணாதிகள் செய்தலும், பின்பு அபராந்ந காலத்தில் ஒருவேளைபுசித்தலும், போசனானந்தரம் பொற்றாமரை ஸ்நானஞ்செய்து, நியமானுஷ்டான பரர்களாய்த் திருமாலைத் திருப்பணி செய்தலும், சைவசித்தாந்த சாஸ்திரசிரவணாதிகள்புரிதலும், அர்த்தசாம பூஜா காலத்திற்றவறாது தரிசித்தலும், சொக்கநாதஸ்வாமி சுவர்ணரத்தின மயமான சிவிகையூர்ந்து எழுந்தருளுந் திருக்கோலந் தெரிசித்துங் கொண்டுசென்று மீனாக்ஷியம்மையாராலயத்தையடைந்து திருப்பள்ளியறைப் பூஜாதரிசனஞ்செய்தலும், அதுபரிபூர்த்தியானபின் புறம்போந்து ஆடிவீதி பிரதக்ஷிணஞ்செய்து சென்று நிராகாரசீலர்களாய்த் திருமடத்திற் பூமியிற் சயனித்தலுமாகிய நித்திய நியமங்களை மேற்கொண்டு இந்நியமங்களில் ஒன்றேனும் ஒருசிறிதேனும் ஒருதினமேனும் ஒருகாலமேனும் தவறாது திருவருளுடனின்றுசெலுத்த உள்ளக்கிளர்ச்சியோடு நடத்திவந்தார்கள்.

இப்படி வருங்காலத்திலே, சுவாமிகள் சிவாலயத்திருப்பணிசெய்து பெரும்பேறடைதற்குரிய பெருந்தவம் பூர்வஞ்செய்துள்ள. அமராவதிபுத்தூர் வயி. நா. க.ராம. வகையினரைப்பற்பல திருப்பணிகளிற் புகுத்தியுய்விக்கத் திருவுளங்கொண்டு, முதலில் புஷ்பத்திருப்பணியிற் றொடங்குவித்து, அதனைத்தாங்களேவகித்து நடத்திவந்தார்கள். அத்திருப்பணி நடந்துவரவர அவர்களுக்குப் பொருளபிவிருத்தி முதலிய லாபகாரங்கள் மிகுந்துவந்தன.

அதன்பின், ஸ்ரீ மீனாக்ஷியம்மைகோயில் முதற்பிரகாரத்து வடக்குத்திருமதில் மிகப்பழுதாயிருந்ததைநோக்கி அம்மட்டிலதனைச் சீர்ணோத்தாரணஞ் செய்விக்கலாமென்று மிகலெகுவாகச் சொல்லியினை

---

* இப்புறத்தொட்டித்தீர்த்தஸ்நானம் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுரர் மகாபா[illegible]க்கு ஆக்ஞாபித்த முறைமையை அனுசரித்து மேற்கொண்டது;

க்கி அத்திருப்பணியிற் றொடக்குவித்தார்கள். அவர்களும், நமது சுவாமிகள் சொல்வனவெல்லாம், உத்தமோத்தம சிவபுண்ணியவிசிஷ்டமாவதேதான்றோ, பொருள்விருத்திமுதலிய இன்மைப்பயன்களைத் தருதலும் நேரேதெரிகின்றோம் என்றெழுகின்ற வுள்ளக்கிளர்ச்சியால், சுவாமிகள் சொல்வதைச்செய்வதில் அதிப்பிரியர்களாய் அத்திருமதிற்றிருப்பணியைப் பூர்த்திசெய்தார்கள். அப்போதும் பொருள்விருத்திமுதலிய பற்பல நலங்கள் மேலுமேலும் கைகூடிவந்தன. அதனுலவர்கள் மனவூக்கந்தெரிந்து அம்முதற்பிரகாரத்தளவரிசை இரண்டாம்பிரகாரத் தளவரிசை திருப்பள்ளியறை முழுதும் சொர்ணமயமாக்குதல் முதலிய திருப்பணிகள் செய்வித்தார்கள்.

அவைகள் பூர்த்தியானவுடன், அம்முதற் பிரகாரத்திருமதிலில் கல்வியறிவில்லாரும் காட்சி மாத்திரத்திற் கண்டுணர்வுறவும், கற்றவர்களும் இவை கேள்விப்பொருளைக் காட்சியளவையில் அனுபவமாகக் காட்டும் எடுத்துக்காட்டென்றுகொண்டாடவும், பெரியபுராணத்தை அனுசரித்து உண்மை நாயன்மார்களது நாமரூப சரித்திர விசேடங்களைச்சித்திர வரிசைகளாகத் தமது திருக்கரத்தாற் குறித்துக்கொடுத்து எழுதுவித்தார்கள்.

அதன்பின்பு, சுவாமிகோயில் முதற்பிரகாரத் திருமதில் பெலமாயிருந்தாலும், மண்டபங்கள் மிகப்பழுதாயும் பலமுடுக்குகளாயும் பிரகாரம்வருவதற்கு முட்டுப்பாடாயுமிருந்தமையால் அவைமுழுதும் பிரித்துப் புதிதாகப்பிரகாரம் நேராய்வரும்படி ஒழுங்குபெறச் செய்து அத்தெற்குத்திருமாளிகைப் பத்தியில் அறுபத்துமூன்று நாயன்மார்களைப் பிரதிஷ்டை செய்யக்கருதி, அந்நாயன்மார்களிற் சில மூர்த்திகளில்லாமலும், உள்ளமூர்த்திகளுக்கும் பூசைமுதலியன இல்லாமலும், இரண்டாம்பிரகாரத்து நிருதிமூலையில் கவனிக்கப்படாமலிருப்பதைக்கண்டு திருவுள்ளம்வருந்தி, அம்மூர்த்திகளுடன் மேலும்வேண்டிய மூர்த்திகளைச்சிற்ப முறைப்படி செய்வித்துப் பூர்த்தியாக்கி, மேற்கருதியபடி அத்திருமாளிகைப்பத்தியிற்சிற்பவர்க்க முறைப்படி பீடமெடுத்து, அதன்மேல் அவ்வுண்மை நாயன்மார்களைப் பிரதிஷ்டைசெய்வித்து, ஈசுரவருடம் தைமீ நடந்த ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுரமஹா

கும்பாபிஷேகத்துடன் கும்பாபிஷேகம் செய்வித்து, நித்திய பூசையும் அந்நாயன்மார்கள் திருநட்சத்திரந்தோறும் விசேஷபூசையும் நடத்திவரச்செய்தார்கள்.

அதன்மேல், சொர்ன ரத்தின ரசிதாதிகளால் ரிஷப கைலாச நந்தியாதிவாகனங்களும், முத்துக்கவச கிரீடகங்கண குண்டலகோளகாதிய திருவாபரணங்களும், இன்னும்பற்பல இன்றியமையாதனவைகளும் செய்வித்தார்கள்.

அதன்மேல், சுவாமி சந்நிதியிலுள்ள பெரியகீழைக்கோபுரம் பழுதாயிருப்பதைக்கண்டு, அதனாலபாயம் வருமென்றுகருதி கவர்னமென்டார் அந்தமட்டிற் சித்திரைவீதியிற் சனங்கள் செல்லாமலடைத்துவைத்ததுமன்றி, அக்கோபுரத்தையும் இடித்துவிடுவதாகக்குறித்திருந்தசமயம், அக்கோபுரத்திலுள்ளேறிப்பார்க்கப்பயந்து எல்லோரும் ஒதுங்குவதுதெரிந்தும், நமது சுவாமிகள் திருவருளே துணையாகத்துணிந்து, அதனுள்ளேறி எங்கும்பார்த்து இதைபெலப்படுத்தலாமென்று நிச்சயித்துக்கொண்டு, வெளிவந்து வயி. ராக. ராம. நாகப்பசெட்டியாரவர்கள் வேங்கடாசலச் செட்டியாரவர்கள் இருவரிடத்தும், இக்கோபுரத்தை இடிக்கவிடாமல் பாதுகாத்தற்கோர் உபாயம் உண்டு, அதற்கான செலவுதொகையும் சுருக்கமாகச்செய்யலாம், அஃதாவது ஒன்பதுநிலையுள்ள இக்கோபுரத்தினது அடிநிலைமாத்திரம் முற்பக்கம்பிற்பக்கத்திலுள்ள நாலுதுவார பாலகர்களையும், அந்த வரிசையிலுள்ள மற்றுஞ்சுதைகளையும் தெளிவாகச்செய்து வர்ணம் வைத்துவிட்டால், யாருக்கும்இடிக்க மனந்துணியாதென்று இதமாகவும் பொருத்தமாகவும் எடுத்துச்சொல்லி, அச்சொல் நயத்தினாலேயே அவ்விருவரும் அதற்குடன்பாடு செய்யக்கண்டு, குறித்தபடியே அதிசீக்கிரம் செய்வித்துக்காட்டிய அளவில், அவ்விருவருமிக மகிழ்ந்து, அக்கோபுரமுழுதும் அவ்வாறுசெய்ய மிகப்பெருந்தொகை செல்லக்கூடியதாயிருந்தும், இவ்விதமே இக்கோபுரமுழுதுஞ் செய்விக்கவேண்டுமென்று அவர்களை கேட்டுக்கொள்ள, அவ்வாறேஒன்பது நிலையும் பரிபூர்த்திசெய்வித்து மேலும், அம்பாசந்நிதிக் கீழைக்கோபுரம் தெற்கு மேற்கு வடக்குக்கோபுரங்களையும் பெலப்படுத்தி அவ்வாறே செய்வித்து நிறைவேற்றினார்கள்.

இத்திருப்பணிகள் நிகழுங்காலமெல்லாம் நமது சுவாமிகள் நித்தியநியமமாக மேற்கொண்ட சுவர்ணபத்மினி ஸ்நாநாநுஷ்டானுடான செபதபதியான பூஜாதிகள் அவ்வக்காலவேலைலே கடவாதுபுரிந்து, திருவனந்தல் முதலிய காலங்கடோறும் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசசிவதரிசனஞ்செய்துவருகின்ற அக்காலங்களினிடையிடையே, கோபுரங்களிலே சிற்பர்கள் செய்துவருஞ் சுதாவிக்கிரகாதிகளைத் தங்கள் திருக்கரத்தாற் றிருத்திக்காட்டி அவ்வாறுசெய்வித்தலும், அங்கங்கே சிவபரத்துவ விளக்கமாகச் சிவாகமாதிகளிலுள்ள சிவசம்பந்தமான மூர்த்திகளைத் தாங்களே குறித்துக்கொடுத்து இன்னவிடத்து இன்னவிக்கிரகங்களைச் செய்கவென ஆக்ஞாபித்துப் பின்னரும் நேரிற்பார்த்துத் திருத்தஞ்செய்தலும், பொற்றாமரையைச்சார்ந்த வடக்குத்திருமதிலில் ஆரம்பித்து அறுபத்துநான்கு திருவிளையாடற் சரித்திரங்களை, அப்புராணத்துக்கு இஃதோர் சாட்சிப்புலனாமென்று அறிஞரெலாம் வியப்பச்சித்திரரூபமாக எழுதுவித்து, யாவரும் அக்காலத்துநடந்த அத்திருவிளையாடல்களை இக்காலத்து நேரிற்காணப்பெற்றோமென்று மகிழச்செய்தலும், தங்களது அரும்பெருமகிமைதெரிந்து தங்களைத் தரிசிக்கப்பெறுதலே பெரும்பேறென்று வந்துவணங்கும் உத்தமபத்தர்களுக்குச் சிவசாஸ்திரோபதேசஞ்செய்து, கற்றதனாலாயபயன் வாலறிவனாகிய சிவன்நற்றாடொழலே யென்றுண்மைவிளக்கி, அதனை இறுகப்பற்றி நிற்கச்செய்தலும், "நாம் பிரமங்கண்டவர்போற் றம்மைக்கண்டாங்கதுவே, நாம்பிரமமென்பவர் பானண்ணுதே" என்பதுமுதலிய உண்மைநூல்களையெடுத்துவிளக்கி நாம்பிரமமென்னும் மாயாவாதமுதலிய அந்நியசமயங்களிற் புகுதாமல்விலகச்செய்தலும், அத்தகை உத்தமபத்தருள்ளே பெருஞ்செல்வர்களாயுள்ளாரைக்கொண்டு திருநந்தனவனமுதலிய திருப்பணி செய்வித்தலுமாகிய இவைபோலின்னும் பற்பல சிவகைங்கரியங்களையே செய்துவந்தார்கள்.

இத்தகைய சிவபுண்ணியமெல்லாஞ்செய்து முற்றினவர்களுக்கே உண்மை நாயன்பாதத்து ஒப்புயர்வில்லாத் திவ்வியகைங்கர்யமாகிய அத்தியுத்தம சிவபுண்ணியம் கைகூடுமென்னு முண்மைவிளக்குதலாக, "உத்தமச்சிவபத்தரிற் பெரிதுத்தமர்களாய்ச் சைவப்பிரபுவுல

சிரேஷ்டர்களாயுள்ள தேவகோட்டை மெ. வகையார் வயி. நாக. ராம. வகையார், மற்றும் அன்பர்களாகிய எல்லாருக்குந் தமது திருவுள்ளக் கருத்துத்தெரிவித்து அவர்யாவருங்கொடுத்த பெருமபொருள்கொண்டு ஸ்ரீமீனாக்ஷியம்மையார் சந்நிதிவீதியிலே குருபூசை மடாலயம் செய்வித்து அதில் வெகுதான்யஹ தைமீ த்திலே கண்ணப்பநாயனார் குருபூஜா விசேஷ சுபதினத்திலே, முன்னரே சிற்பவிதிப்படி தங்களாற் செய்விக்கப்பெற்ற உண்மைநாயன்மார் திருவுருவத்திருப்படம் பிரதிஷ்டை செய்வித்து நித்தியபூசையும் கண்ணப்பநாயனார் குருபூசைமுதலாக நைமித்திக விசேஷ குருபூசை முதலியனவும் நடத்தி, இவைகள் எப்போதும் நடந்துவருதற்குரிய மூலதனப் பெருக்கமும் நிறைத்துவைத்து, இத்தகைய உத்தமோத்தம சிவபுண்ணியப் பிரதிஷ்டாபகர்களும் பரிபாலகர்களுமாகிச் சைவசித்தாந்த சன்மார்க்க சற்சனசேவ்யர்களாய் வீற்றிருந்தருளினார்கள்.

இந்தப்பிரகாரம் ஸ்ரீமெய்யப்பசுவாமிகள் மதுராபுரியினெல்லைகடவாது வீற்றிருந்தருளித் தமது காலமுழுவதும் மனம் வாக்குக்காயங்கள் மூன்றினாலும் சிவகைங்கர்யம் செய்தமர்ந்த சிவநியமச்சிறப்பினாலும் நிர்மலாந்தக்கரண விசேஷ நிரந்தர சிவத்தியான ஞானயோக சீலத்தினாலும், தங்கள்காலமுழுதும் சிவவிஷயமாகவே செலுத்தி வந்தார்கள்.

இவ்வாறு ஸ்ரீமெய்யப்பசுவாமிகள் முப்பத்தைந்துவருஷகாலம் சிவாநுபூதிப்பெருஞ்செல்வர்களாய் நம்மனோர்க்கெல்லாம் சிவநியம நிதரிசன பூதர்களாய் இம்மதுராபுரியெல்லை கடவாதுவீற்றிருந்தருளிக்கலியப்தம் சகூஅள பார்த்திபஹ மாசிமீ ௫௳ சோமவாரம் துவாதசிதிதி திருவாதிரை நட்சத்திரம் மிதுனலக்கினம் கூடிய சுபதினத்திலே அகண்டாகார சச்சிதானந்த சொரூப ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுரர் திருவடி நிழலிற் கலந்தருளினார்கள்.

இவர்களாற் செய்யப்பெற்ற திருமாலைத்திருப்பணி நியமமும், உண்மை நாயன்மார் குருபூசை நியமமும், திருநந்தனவனத்திருப்பணிமுதலிய பலவகைத் திருப்பணிகளும் மதுரைத் திருப்பணியாள

ளாகிய வயி.நாக.ராம. வகையாராலும் ராம. மெ. வகையாராலும்நடை பெற்று வருகின்றன.

இவர்களாற் சைவசமயத்தில் சத்தியபுத்தியும் சிவபத்தியும் திராவிடவேத பாராயண சிவபூசாதி சிவநியமமும் சிவசாஸ்திரப்பிரக்ஞையும் பெற்றுச்சீடர்களாகும் பெருந்தவம் வாய்ந்தோர் நம்மனோர் பலர்.

நம்மையெல்லாம் தங்கள் சீடர்களாக ஒப்புக்கொண்டு நம்மையுய்ப்படுத்திய நமது குருமூர்த்திகள் ஸ்ரீமெய்யப்ப சுவாமிகளாதலால் குருவைத்துதித்தல் உத்தம சிவபுண்ணிய மென்பது பெரியோர்கள் ஆணையாதலால் குருஸ்துதி ரூபமாகிய ஸ்ரீமெய்யப்ப சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி யென்னும் இந்நூலை அறிவிற்சிறியனாகிய தமியேன் குருப்பிரசாத சித்தியின் பொருட்டுச்செய்தேன்.

## ஸ்ரீமெய்யப்பசுவாமிகள் சரித்திர சங்கிரகம்

3910

உ

கணபதி துணை

## மெய்யப்ப சுவாமிகள்

# பதிற்றுப்பத்தந்தாதி.

### காப்பு.

ஓங்கருவா யுருவாகி யுருவருவா யுவைகடந்த வொருத்தன் கூடற்
றேங்கருவாய் பொற்கமலந் தேரிரவி பலகாட்டுந் தெய்வ வானிப்
பாங்கருவா முகத்தனருட் சித்திவிநா யகற்பணிந்து பரமா னந்த
நீங்கருவாழ் வருள்வாய்மைக் குருமணிக்கிவ் வந்தாதி நிகழ்த்து வேனால்.

### நூல்.

மணியமர்பூந் திருமார்பன் முதலோர்க் கெட்டா வானவனை யா
ரறிந்தவ் வழிநின் றேத்துந், திணியமொமக் கியலாவென் றசாவு மும்
மைத் திறன்மலக்கெதம் மவர்க்கருளுஞ் செயலை மேவிக், கணியமர்பூ
ம் பொழின்மதுரா புரியிற் பாலக் கனல்விழியு மணிமிடறுங் கரந்தி
ட் டெம்போ, லணியமர வெழுந்தருண்மெய் யப்பநின்றாட் கன்பொ
ருவா வின்பநிலை யருளுவாயே. (௧)

அருமைமணி வரந்தெரிந்தோர் சுத்த தானத் தமைத்தருச்சித்
ததன்பயனை யடையு மாபோ, லொருமையுறப் பன்னாட்செய் தவத்தி
னாலே யுனையிம்பர் வரப்பெற்ற வுலக மாது, தருமையுறு காரைநக ரி
னுந்து வாத சாந்ததலத் தெஞ்ஞான்றுந் தகைந்து கொண்டே, பெரு
மையுறப் பெற்றுண்மெய் யப்ப நாயேன் பெறலரிய தவமில்வழிப் பெ
றுத லென்னே. (௨)

பெறுங்கசப்பீ தென்பதினு முண்டு வாந்தி பெயினெவருங்
கொள்ளாரென் பெற்றி நோக்கி, வறுங்கொடுமா யாவாத மதமுன்புக்
கு மற்றதனை நீத்தருஞ்சை வத்திற் சார்ந்து, தெறும்பவந்தீர்த் தரு

ளுநெறி சைவமென்றே தேற்றிடவு மெய்க்குரவ தெளியார் சில்லோர், றுறுந்தகையங் நெறிப்புகுதா துலைந்தா ரந்தோ வூழ்செய்குறை யன்றி யருட் குறையொன் றுண்டோ. (௩)

ஓதருமுன் மணிமேலாந் துவாத சாந்த வொண்டலமே நமக்கெ ன்று முரிய தான, மீதொருமே மென்பதனை யால வாயி னெல்லைகட வேமெனக்கொண் டியாங்க டேற, மாதொருபாற் சவுந்தரநாயகர்தம் மால வாய்நின்று பரககிரிக்கு மகிழ்ந்து செல்லும், போதொருவா தெல்லையள வுடன்போய் மீண்டு பொற்கூட லமர்ந்தருண்மெய்ப் பு னித போற்றி. (௪)

புனைந்தகழு மணிப்பூணொன் றறிவி லாமண் புழுதிவினை யாடும ழப் பொலங்கை யுற்றான், முனைந்தவினை யாட்டொழிந்தங் கதனைப் பேணி முதமடையு மோவதுபோன் முரட்பவஞ்சத், திணைந்தமை யு மாயிருளும் பிரித்துநோக்கா திருளேயாய்க் கிடக்குமெமக் கிரங்கி யெம்போ, னினைந்தருளால் வந்தருண்மெய் யப்ப நின்றூ ணவியுமல வலிதொலைப்பா னயந்தி லேமால். (௫)

நவையகன்று விதித்தபடி புனித வன்பா ளுடிபெருந் தவரிதய நளினத் தும்பர்ச், அவைபெறுந் தண் கருணைமது வொழுக மேவிச் சுந்தரத்து விதபோக மருளுநந் தோன்றல், பவமுழந்து தவமிழந்த பதிதன் காமப் பாழ்ங்குழியி னிடைவீழ்ந்த பதக னேனுந், தவர்பு கழ்மெய் யப்பவிறை நீயே யானின் றூட்கமலக் கடியனரு டந்தாள் வாயே. (௬)

தந்தையர்தாய் போயினர் தந்தை தாயார் தந்தையருந் தவ்வை யரு மென்று சாற்றி, முந்தைமறைப் பொருள்கோது முணிந்து தே ற்று மூவருண் மொழிப்படியே முறையால் வந்த, தந்தையெலா ம ளித்துயர்நித் தியமாந் தாதை சங்கரனே யென்பதற்கோர் சான்ற தா குப், பந்தமொழித் துயர்வீடு தரும்பேர் பூண்ட பரமகுர வனைப்பணி ந்தெம் பரிவு தீர்ப்பாம. (௭)

பரிவொடுவை கறையினிற்பொன் கமல வாவி படிந்துரிய நியதி முற்றிப் பைம்பொற் கோயிற், றிருவனந்தன் முதற்காலந் தோறுஞ் சென்று தெரிசனஞ்செய் தெண்ணில்வலஞ் செய்து போற்றி; யுரிய

செப நியானபூ சாதி மேலு மலகின்மலர் தொடுத்தலின்ன வவனி
தேர்ந்து, அரிசறச்செய் துயச்செயுமெய் யப்பனெம்மான் றுணைப்ப
தங்கள் பாவிவினை தொலைப்பா மன்றே. (அ)

தொல்லைவினைப பவமுடற்ற நைந்து வாடித் துன்புறுமன் பினி
யாய துட்ட னேனலு, நல்லருளை யுருவாமெய் யப்ப வாழ்வே நலமி
லியென் றிகழாது நயந்தாட் கொண்டால், வல்லறிஞர் பழதுரைப்ப
வழக்கொன் றிலலை மாற்சார சம்பந்த வழக்கி தன்றே, வில்லமெனு
விரவாமு னீத ருனே யெழிற்கொடைஞர் தொழிற்கழகா மெங்கள்
கோவே. (௯)

கோவமருங் கருணைமது வொழுகுஞ் செய்ய குளிர்கமலத் தா
ம்பல்விரி கோலம் போல, வாவன்மிக வருட்டிருவாய் மலர்ந்து வா
வென் றழைத்தருளித் திருத்தொண்டர் புராண மாதி, மேவருநூ
லரும்பொருள்கள் விரித்தா யெந்தாய் விமலமணி வாக்கடிகள் விளக்
கும் வாய்மைப், பாவழங்கு கின்றுயென் பதன்மூற் பாதிப் பயன்பெ
ற்றேன் பிற்பயன்மேற் பாலிப் பாயே. (௧௦)

## வேறு.

பாயவா ரிதியிற் கொடுவிட முதித்துப் பண்ணவர்க் கிடர்புரிந்
தெனநின், றூயசந் நிதியிற் றென்டரோ டணைந்த தோமறு தவத்தி
னே னகத்துத், தீயவெங் காம விடமுதித் தறிவைத் தின்றெழு மி
ன்றதா லுண்மை,நாயக வதனை யொழித்தருளேனைக்க நல்கியெற் புரப்
பதெஞ்ஞான்றே. (௧௧)

ஞாலநின் புகழே யாகவென் றமுத ஞானபோ னகருரைத் துயி
ர்கட், கேலுமப் பாதந் திரஞ்சுதந் திரனம் மீசனவ் வீசனே யிறை
நாஞ், சாலுமன் னடிமை யெனத் தெளித் திடவுஞ் சாற்றலென் சழக்
கர் தாம்பிரம, மாலமார் களத்தைக் களம்புரிந் தமர்மெய் யப்பனே
யொப்பிலா வமுதே. (௧௨)

தேவெனப் பிறந்து பிறந்துழ லரியைத் திசைமுகன் முதலவி
வ்வையான், மேவிடா துண்மைத் தேவதே மலர்த்தாள் விழைந்துமெ
ய்க் கதிபெறற் குரிய, காவதோர் சுத்தாத் துவிதநன் னெறியே யவ

லினை னடைந்திடப் பணித்தாய், தாவிலா வருளா லுருவுகொண் டருண் மெய்த்தாதையே தமியனேன் றரமோ. (௧௩)

தத்துவ மசிமா வாக்கியப் பொருளை தந்திட முப்பொரு ளுண் மை, கத்துவர் வீண ரொன்றென வதனைக் கனவிலுங் கருதிட லிலை தான், நித்தனை யிலர்பா லனுகிலு மஞர்முற் றெய்திடு மெய்தலென் றிசைத்த, சத்திய பிதாவின் றிருவடிக் கமலந் தமியனேன் றலைக்க ணி யாமால். (௧௪)

அணியதா வறிவு மடக்கமும் பொறையு மைம்புல னெறிச் செ லா மனமுந், திணியபத் தியுஞ் சிவார்ச்சனைச் செயலுஞ் சிவாக மா தியசிவ நூல்கள், கணியகை நெல்லிக் கனியினேர் துள்ளங் கச டறத் தெளிதலும் விளைந்தேன், றணியபூம் பொழில்சூழ் கூடலி ற் றிருக்குஞ் சத்தியத் தந்தையாங் கருளாய். (௧௫)

அருளினு கரமே யிருண்மலக் கிழங்கை யகழ்ந்தவ ரருந்துமா ரமுதே, தெருளகத் தறிவாந் திரியிடை நேயஞ் செறிந்திடத் திகழு மெச் சுடரே, பொருள்விரித் தருணூல் வரையறுத் துணர்த்தும் பு னிதமெய்த் தாதையே நின்பாற், கருளகத் தொழிந்தாங் கொளியுற ப் பரவிக் கையடை புகுந்தனன் கடையேன். (௧௬)

கடைப்படு பிறவி பற்பல பரித்துக் கழிந்தபின் பெற்றமா னுட மீ, திடைப்பல துயர்நீங் கெல்லையுந் தெரியா விந்தநின் னடியவன புரிந்து, னுடைப்பத மடைதற் கெம்பதுய்த் துணரா துழன்றனனிம் மனை வாழ்வில், றடைப்படி லெவனோ வுய்குவன் றுவாத சாந்தமா தலத்துமெய்த் தனியே. (௧௭)

தனியர சமர்ந்து புரிதலு மயன்மால் சசியிறை பதங்களு மொ ருவாத், துனியவா மதனுற் சுகமென நாடித் தூண்டில்வாய்ச் சலசர மாகேன், கனியுமன் புடையார் நின்னடித் தொண்டர் கழகஞ்சேர்ந் தவர்பணி யேவற், னியனு யொழுகு மதனையே யருண்மெய் யப்ப னே யெனக்கினி யானே. (௧௮)

எனக்கெனச் செயல்வே றில்லைநின் செயலே யாவையு மவ்வன மாக, வெனக்கெனச் செயுநா னெனலது வெபமா விரும்புவிப் பிறந்து

ழல் இன்றேன், கனக்குழா மெனவா குழிப்புகை நோக்கிக் கனிமயி லகவிடக் குவளை, வனக்கமேனைக் குணர்ந்தாங் கிதழிபொன் சொரியு மதுரைவீற் றிருக்குமெய் மணியே. (௧௯)

மணியினி லொளியின் மறைந்தெம தகத்தே மன்னிவீற் றிருப் பவுங் கழுவி, மணியினி லொளிகாண் மரபினுள் ளன்பாம் வளர்கடை கோலியைத் தறிவாந், திணிகயி றதனாற் கடைந்துகாண் கிலலாச் சி றுவரேம் பருவமோர்ந் தெமர்போற், றணிவில்பே ரருளாற் போந்த னை யான்மெய்த் தாதையாங் கருள்வதுன் பரமே. (௨0)

## வேறு.

பரவிடா ரடிமை தாமாப் பசுபதி தமக்கு மேலா
யொருவனுண் டென்றெ ரத்து விதபதத் துண்மை நோக்கார்
கரிசர்நாம் பிரம மென்றே கழறுவ ரிவர்தம் பாவ
மிரியுமோ வாலவாய்மெய் யப்பவெம் மிறைவ னேயோ. (௨௧)

இறைவனீ யடிமை யாங்க ளென்பதற் கைய மின்று
லறைவதெ னெம்மை முற்று மளிப்பதுன் கடனு மன்றே
யிறையுன தடித்தொண் டாற்றி யிருப்பதெங் கடனே யாக
வறைபுனற் கூடல் வாழ்மெய் யப்பனே யருள்செய் வாயே (௨௨)

வாயில்சேர் மனத்தர்க் கொண்ணு மணியினை யால வாயெந்
தாயினு மினியான் றன்னைச் சத்திய பிதாவை நாளுந்
தூயமா மலரிட் டேத்தித் தொழுமடி யவர்க டம்மைத்
தீயசூழ் வினைவந் தென்னே செய்திடக் கடவ தம்மா (௨௩)

அம்மையோ டப்ப னீயென் றனைத்துள சுற்ற மாவார்
தம்மையோர்ந் திழந்து வாழுந் தளிப்பெருந் தொண்ட ரென்று
மெம்மய றீர வெண்ணி யிந்நெறி யொழுக நல்காய்
செம்மையா ரால வாயிற் றிகழுமெய் யப்ப தேவே. (௨௪)

தேவரு முனிவ ராதித் தீரரும் தெரிந்து போற்ற
நாவெழா நினது வாய்மை நலமிலே னுணர்ந்துன் பாத
மேவுற லருமை யான்மெய் யப்பனே வினையி னேன்பா
னீவிழைந் தருடி யால வாயுன்ற விமல வாழ்வே. (௨௫)

வாழ்வெனக் கிதுவென் றெண்ணி மனைவிதாய் தந்தை மக்கள்
சூழ்தம ரின்னோர் வாஞ்சைச் சுழல்வளிக் கொடியொன் றாகி
மாழ்குவேற் குனது பாத மலர்க்கொழு கொம்பு நல்கி
யாழ்துய ரகற்றி யாண்மெய் யப்பனே யருளின் வைப்பே. (உசு)

வைகலு மடநல் லார்கண் வலையுறீப் பிணைத்த கொங்கை
மொய்களி றெழுந்து தாக்க முதுக்குறை வின்றி மாள்கி
னைகுவ தழகோ கூட னண்ணுமெய் யப்ப னேயர
னுய்குவ தெவனீ வாளா வுற்றிடி னுணர்த்தி டாயே. (உஎ)

உணர்வரும் பொருளே நீக்கண் ணொளித்தெதிர் போல வந்து
பணைமுரா சுறங்காக் கூடற் பதியமர்ந் திருந்த பான்மை
யுணர்வுறுச் சகல ரேமை யுய்யக்கொண் டருளா வன்றோ
வணைவுற வருளாய் வாளா வமர்தியா லிஃதென் னையே. (உஅ)

ஐயனே யரசே கூட லரும்பெற லமுதே தோற்றும்
வெய்யநோய் மருந்தே பாச விமுத்தமெய் யறிவா னந்த
மெய்யமெய் யப்ப நாத விழைந்தறிந் தனுகு மாறில்
கையனேன் புலப்பு தீர்ந்துன் கழற்புகக் கருதி டாயோ. (உகூ)

கருதுவார் கருத்தி லூறுங் கழிசுவைத் தெளிய பாகை
முருகுவார் பொழில்சூழ் கூடன் முதுபதி யடைந்து போற்றி
யுருகுவார்க் கமுதை யுண்மை யப்பனு மொப்பி லேனைப்
பருகுவார்க் கலது சென்மப் பசிப்பிணி தொலைய வற்றே. (௩0)

## வேறு.

தொலையா வினைசம மலபா கமுமுறு தொடர்பா ரடியவ ரிடையேகா, நிலையா யருள்புரி தலையே முறையென நினையே லதுகொடு பரவாதுன், னிலையா வருள்வளி கலினர் கொளலென வுனதா ரருள்பெற வெனையாள்வா, யலையார் புனனிறை மதுரா புரியின்மெய் யடிகே ளனைவரு மறிவாரே. (௩க)

அறிவா ரறிவரு மருவோ டுருவமு மலவா யருவுரு வமுமாகா, நெறியா யினையுனை யெவரோர் குவமென நிகிலா கமமுறை யுணரா தே, வறிதா குவரிவர் சிறியா ரெனவுனி வலிதா ரருளினெம் வடிவே

யாய், வெறியார் பொழின்மது ரையில்வாழ் வரியமெய் விமலா வரு
ளனன் மிகையாமே. (௧௨)

மிகநீ டியவினை புரியா முனமதன் வினைவா னவனியின் மிசைவா
ரா, விகவாழ் வலதருள் பெறுமா றெறியுற விலறு யலையுறன் முறை
யேயோ, வுகவா ரிதியென மடவார் வெருவிவி ணுறுமா ளிகையுற
வடியாரோ, திகவா வரவொலி மிகுதூ ரியவொலி யெழுமா மதுரை
மெ யிறையோனே. (௧௩)

இறைவே றிலைநமி லகமே பிரமமெ னிவர்சா தனமென வொரு
நாலே, யுறுவா னவைகொடு பெறுமா வுளகுறை யுவர்பா லுறல
வன் முரணுமா, விறைவே றவனருள் பெறுவா னவைசெய லிருவி
மா மலசகி தர்களான்மா, நெறியே யிதுவென வறிவா னருளுமெய்
நிமலா மதுரையி லுறைவாழ்வே. (௧௪)

உறையார் விழியர்பு ளகமா ருடலர்மெ யுளமா ரழல்படு மெழு
காவா, ரறைதே லுகரித ழியனே பரமென வரியா லியர்பசு வென
வோரா, வுறையா வழிபடு மிவரோ டெணுறை வொருவா வகைதின
மருள்வாயோ, கறைவா யளவிடு மெயில்சூழ் நகரெலை கடவா தமர்தரு
பெருமானே. (௧௫)

பெருவா னகடுற வளரா வமர்பொரு பிறரா னிகழ்து யரனுகா
மே, தருவா னவரிடு மரணு மெனவுனை தருகா மதுகரி மதமோடே,
வருவே கவதுவி ணதிவா ணியமுனை வரல்போ லொழுகும துரைவாழ்
வோ, னருள்வாய் மையனெமை யுடையான் மலரடி யடைவா ரிரு
மையு முடையாரே. (௧௬)

உடையா வலியினர் புரமூ வருமெரி யுறுநா ளழிவிலர் பெருவா
ழ்வே, படையா மருவின ரெனவோ ருதிபல பலவா றுழல்வதென்
மனமேநா, மிடையா தருள்பவன் மதுரா புரியின னிசைவாய் மைய
னெமை முழுதாள்வா, னடைவா யவன்முன மயராய் வழிபடி னதி
ரா வருதுயர் பிதிராமே. (௧௭)

பிதிரா டகமென வருமா யையினிடை பெயரா துலகமி தெனு
நூலே, முதிரா வறிவர்பி ரமமே முதலென மொழிவா ரதுமுரணே

ணவோர்வா, னதிரார் கலியென மறையோ தியகிடை யவையோ துறு
னை மிகுவாரேனார், வெதிரா யிடமொழி மதுரா புரிமரு வியவாய்
மையனரு ளினன் மாதோ. (௩௮)

இனன்மா விழிவழி யுணரா வகையொழு கினதே னிறைதனி
னிறையாறு, னெனவோ துறும்வகை யவிரு மொளிர்தரு மெழிலார்
பொழின்மது ரையில் வாழ்வோ, யனகா நிறைகுண வதுலா வறிவர்
களதிபா வரியமெய் யுணர்வேயா, னுனதா ரருள்பெறி னிரையா
தியதுய ருறுமா வரிதும திணிதாமே. (௩௯)

இனியோர் செயற்பிற முயல்வான் விழைவதே னிறவா நலனுற
லெளிதாமீ, தனியாய் மலர்கொடு மதுரா புரியின்மெ யுறுதா தையி
னடி பணிவாய்நீ, கனிவாய் மலர்விக சிதனு யருள்விரி கமலா னன
மொடு கனிவோடே, யினிதா முறுவலொ டெமைவா வெனவரு ளி
யவா சகமுன மறியாயோ. (௪0)

## வேறு.

அறிவ தறியே னறிந்தார்த மகத்தும் புகுதே னவர்கூறு
நெறியு மொழுகேன் பொல்லாத நிலையில் வாழ்வை மெய்யென்று
வறிதி னுழல்வேற் கரனாகி வருந்தல சிறுவ வெனவுரைத்தாங்
கறிவை யருளு மெய்த் தாதை யருளின் றகைமை யளக்கவற்றே ()

அளக்க வரிய தீவினைத்தென் றறைவ தறிந்தும் வறுங்காம
வளக்க ரிடைப்பட் டாயிழையா ரலைப்ப வவர்கட் கொலைவேனும்
பிளக்க வினைத்த தடங்கொங்கைப் பிறங்க ருழு மீதாழ்ந்தத்
துளக்க முறுவேற் கருட்புனையின் றருளா யுண்மைத் தூயோனே ()

தூயா ரமுதே பவக்கோடை தொலையக் கருணை பொழிபுயலே
பாயா வாயி லொருசேரப் பருகற் கினிய பசுந்தேனே
யோயா தருளுந் துமணியே யுலவாத் திருவே யெனவோதி
மேயார்க் கினிய மெய்த்தாதை யிரைத்தாள் பரவ வினைபோமே. ()

மேனாள் வினையாற் பலபவங்கண் மேவி யுலைந்தேன் பெறற்கரிய
வானு மகிமை மானுடமீ தரிது வாய்த்து மதனருமை
யானுய்ந் துய்யு நிலைவிரைந்துற் றிருகப் பிடியா துலைவேனே
னானார் பிறவி யொழிந்தின்ப முறுவ தெவன்மெய் யுரவோனே. (௪௪)

உரகப் பருவாய் மண்டூக மொப்பக் கொடிய மடநல்லார்
விரகிற் றுயரு மஃதன்றி மெய்ம்மைக் குரவ மீளாத
நரகத் துயர்க்கு மிலக்காகி நையக் கடவே னுய்யும்வகை
வரகட் கருணை தாராயேன் மாறாப் பிறவி தீராவே. (௪௫)

தீரத் தெளிந்தோரக் ககத்திரியிற் றேங்கு மருணெய்த் தோபத்தறிவே
யாரச் சுடரிட் டருள்புரியு மதனி லறிவு சிறிதுமிலேற்
கீரக் கதலித் தண்டினழ லெரியக் கொளுநெ லெனவருளின்
வீரத் தகையை விளங்கிடுமே மெய்யிப் படிகே ளுலகமெலாம். (௪௬)

உலகெ லாமுஞ் சைவநெறி யோங்கிப்பொலியத் திருவுளங்கொண்
டிலகு மருளே திருவுருவா யிணையில் வினையேன் போல்வாருங்
குலவு கருணைப் பெருவெள்ளம் குளித்துக் களிக்க வந்தருளும்
பலரும் வணங்கு மெய்த்தாதை பதமே புணையாப் பற்றுமினே. (௪௭)

பற்று நீக்கிப் பலகலைகள் படித்தாய்ந் ததிகத நித்தமுணர்ந்
துற்று நேசக்கி புன்மையிதென் றுறுதி கோடற் குரணில்லே
னற்ற நோக்கிக் களைகணின்றி யலைவார்க் கருளுந் தொழிலோய்நீ
குற்ற நோக்கா தருளுதிசெங் கூடல் வாழ்மெய்க் குலமணியே. (௪௮)

மணியே யியன்மெய்ச சங்கமரீஇ வளரு முண்மைத் தமிழ்க்கூடற்
கணியே யருண்மெய் யப்பவடி யடைந்தாரக் கவலப படுபிறவிப்
பிணிநோய் தீர்க்கு மவுடதமே யின்று தளிக்கும் பெருநிதியே
பணியே னுனையன் றொருவரையும் பரமா வருட்கண் பாராயே. (௪௯)

பாரா திபர்பேர்ந் தறிவு கெடும படிராங் கரிய தான்புறிழு
நீரா ரிதழி முடியோனே நிலவும் பதியென் றுணர்ந்துள்ளம்
போரா நிலைமை கொண்டன்று பெற்ற நிலைமைக் குறுநெறியின்
வாரா துலைதற் கென்செய்கோ வாய்மைக் கருணை வள்ளலே. (௫௦)

## வேறு.

வள்ளை வார்குழை மாதர் மயற்படிந்
தள்ள லார்கய மாயனை யாதுநீர்
விள்ள லாதமெய்ப் பேறு விழைதிரேற்
கள்ள மின்றிமெய் யப்பற் கருதுமே. (௫௧)

கரிய கண்ட கபாலகங் காளமாற்
கரிய வீசமா தேவ வரவெனு
வுரிய நாமத் தளவினி லுண்மைநாசந்
தெரிய நல்கினன் மெய்யப்ப தேவனே. (ருஉ)

தேனி னேர்மொழி யார்கட் டிளைத்தவர்க்
கூனு மாகி யுடலு முதவிமெய்ஞ்
ஞான மின்றி நடலைப் படிலவ
மான நின்னதே வள்ளன்மெய் யப்பனே. (ருங)

அப்பி லக்கர மாக்கை யலைபொருள்
புற்பு தத்தினிற் பொன்று மிளமையென்
றெய்ப்பில் வைப்பெமை யாளுடை யீசன்மெய்
யப்ப னென்றடை வார்வினை யாசறும். (ருச)

ஆச றுத்தெமை யாளுமெய் யப்பனைப்
பேசின் மெய்க்கதி பெற்றிட லாம்பல
யோச னைக்கொ டுழிதரு மூமர்கா
ளாசை யிற்கடம் பாடவி யண்மினே. (ருரு)

அண்ணித் தன்ப ரிதயத் தமருமுக்
கண்ணிக் கென்ப கடம்ப வனத்துமெய்
நண்ணித் தொண்டர் குழாத்தி னடுவுறு
மெண்ணித் தொல்வினை பாற்றற் கெழுமினே. (ருசு)

எழுது சித்திர மொத்திரண் டிற்செலாச்
சுழலை யுற்றெலி யோடுபோய்த் தொல்லுருத்
தொழுதி ருத்தற்குத் தூரிய னென்செய்கோ
வழுதி ருப்ப னருடிமெய் யப்பனே. (ருஎ)

அப்பி னேக்கர மங்கைய ரட்டல்கண்
டாப்பில் வானர சாதலி னெண்மைத்தே
யுப்பின் றட்டகூ மேற்றுண் டுறைதன்மெய்
யப்ப னாரு ளோட்டம ரப்பெறின். (ருஅ)

பெறுவ தொன்றுமெய் யப்பயான் பேழ்கணித்
திறுதி யுற்றுமே லீண்டுறி லீசனே
யிறைவன் மான்முத லோர்பசு வென்றுகொ
ளுறுதி நீங்கா வுணர்வோ டுதித்தலே. (௫௯)

உதவி யோதன முண்பியா வாறுபோ
லிதழி வேணிய னேபர மென்றுண
ரிதய நல்கினை யிந்நெறி நிற்பியா
யதனை யாவர்மெய் யப்ப வருளுவார். (௬௰)

## வேறு

அருவி னைப்பல பிறவி புக்குழ லவதி பிற்பட வடைதிராற்
செருவி னைப்புரி யிபமு ழக்கொலி செவியு றச்சிகி யகவநேர்
மரும துக்கமழ் முலைந கைத்திட மலரும் விற்பொலி குமுதம்வாய்
பொருவி லற்புத மதுரை யிற்பொலி புகழ்மெய் யப்பன சரணமே. ()

சரவி ழிப்புய னெறிகு ழற்பகு சசிநு தற்கிரி முலையினர்
விரகி னிற்சுட ரழலி டைப்படு மெழுகெ னக்கரை யுளமிதே
யிருமை யிற்பய னுறவெ மக்கரு ளெழிலி யொத்திடு கருணையாய்
வரமெய் யப்பநின் மலர டிக்கணின் வலிய கற்குறழ் மாமெனே. ()

மரபி னிற்பல கலைகள் கற்றுமென் வடிவி லெற்பெழு வசைவிலா
தரிய நற்றவ நிலையி லுற்றுமெ னவனி முற்றவு மழியுநா
ளுரிய வெம்பின மொடுலை வற்றெருளி ருசக முற்றெயின் மதுரைவா
யருள்மெய் யப்பன வடிக ளற்பொடு மகநெ கக்கரு தலர்களே. (௬௩)

அலர்கொள் பைத்தொடை வழுதி முற்பக லவனி யைப்புய மணியுநா
ளிலகி ரத்தின படமி யைத்தென விருபு றத்துகு மலர்களா
னிலவு பப்பொடு விரைந திப்புன னிமிர்செ லற்புத மதுரைவாய்ப்
பலர்வ ழுத்துபு யுணிமெய் யப்பன பதம னக்கொடு பரவுவாம் (௬௪)

பரவை யிற்புனல் சுவற வுட்செறி பரிபூ கக்கன லெனவெனு
தருவி னைத்தொகை முழுதடக்கிந லறிவெ ழற்கினி தருளினு
விரவை யுற்றதி மரையெ னக்கணி யிணரு குத்துள கொடையினர்
தாமு ணர்த்தும துரைமெய் யப்பநி சமல மற்றறும் விமலமே. (௬௫)

விமலை மெய்த்தளி முனமர் டைக்கிளி வீருமை யக்கர மவையோடே
சுமைகொ ணத்திசை பிரண வத்தொனி சுவண பத்மினி முழுகுவோ
கமைய நற்குரு மொழியி னற்பொடு மருள்வ ளப்பதி யமருவோன்[ர்க்
விமல வத்துவி தபத வுட்பொருள் விரிமெய் யப்பனை யடைகுவாம்.()

அடைய வர்க்குள முரண ழித்தர சியனி றுத்துபு திறலினோர்
குடைநி ழற்புவி தகள்வ ளர்த்தருள் குமரி முக்கணன் மகனுமாண்
படைவு றத்தனி யரசி யற்றிய வதிம கத்துவ நகரினு
ளுடைமெய் யப்பன முளமு றத்தம முடன்வி டைக்கொடு நடவுமே.

நடவை பற்பல தருபி றப்பிவை நலித ரச்சுழ லுறுவதே
இடலெ டுத்துழ லுயர கற்றிமெ யுறுதி பெற்றிட வருதிராப்
கடையு கத்தினு மழிவ றத்திகழ் கடிநி பத்தனி யடவியாம்
புடவி யிற்சிவ புரமெய் யப்பன புதுவி ரைக்கழல் புகுதுவோம். ()

புகைய னற்புனன் மிசையு தித்திடல் புதுமை யக்கன விடையிலே
வகைய சொற்கரி கரமெ டுப்பொடு மறைவ ளர்சசியி ததனின்மே
தகைய வற்புத மெனவ ளிச்செறி தருமை ரைக்குல வயல்கள்சூழ்
மிகுவ ளந்தம துரைமெய் யப்பன விரைம லர்க்கழல் பரவுவாம். ()

பரம தக்கரு ளறவ ருட்செறி பரவை யுற்றெழு பரிதிநீ
ளருளு மெய்ப்பதி பசும லத்திய லறைய மத்தொகை மலமொரீஇ
விரவு சத்திப திதலை யுற்றுறும் விமல முத்தியி னியல்பெலா
மருண்மெய் யப்பவெ னிதய பத்மமெ னலரு வித்திலை முறையிதோ.

## வேறு

இதமருவ வருட்கையினுற் றத்துவசோ பானத் திலங்குபிரை நலங்கொளுவ வேற்றியருண் முறையு, முதமருவு வானிரங்கு முயிர்க்கருள மீளு முறையுமுணர்த் துவகடுப்ப முதுமதுரா புரியிற், சித முறுகோ புரமேறி யோவர்வினை திருத்தித் திகழ்பொறியாற் புகழ் முதனூற் செம்பொருடேற் றுபுநீங், கதமுறுநன் மணியொலிகேட் டிறங்கியா லயம்புக் கருண்மெயப்ப னடியடைந்தா ரவல்மொழித் தவரே. (எக)

அவனியிடை யாசிரிய ரறிவுடைமா ணவர்க்கி யருமையிலா
பொருளகத்தி னறிவுறச்செய் திடுவார், தவமுனிவர் புகழ்பரம ச
குருமெய் யப்ப சாமிதிருத் தொண்டர்புரா ணர்த்தமுல கின்ற,சிவை
மகிழா லயமதிலிற் புறக்கண்ணி றைலுந் தெரிந்துலகர் சிலமடைய
திறதமெளிது தெரித்தா, னிவன்பகிமை பொருவாது பல்லூழி யவ
நத னிசைத்தா லு யளக்கலுறு மியற்கையின தாமோ. (௭௨

இயற்கைபுணர் வினைரறுபான் மூவருமுன் றெளி னிரும்பணிக
பலதலங்க ளிடையியற்றி யீச, னயத்தகுபூங் கழலடைந்தா ரின்று
னெருங்கே நகரிதனி லோரிடத்தே நணுகியவர் தத்தம், வியத்த
மற் புதசரித நிகழ்ச்சியொடுங் காண மேவமெலவ னென்றுகண்ட
விளம்புறச்செய் செயலாற், செயற்கரிய செய்வரெனு மறைப்பொ
டேற் றியமெய்த் தேசிகனைப் போற்றிவரு தோற்றமது தீர்ப்பாம்.

... வாயில்பர நாமெனமு னயன்பால் சொற்றத
... ஆன்பமிகை யோர்ந்துஞ், சாற்றுவரப் பாமுடலிற் ப
கடத்தி... றயங்குமஃ தொழிந்திலையோன் றென்பரந்த ம
யோ, வேற்றகடத் தினிற்பலவாய் மான்றுகண்ட தயலோ ரிவர்க்
டன்முற் றோன்றியதெங் கென்றுணரி னநாதி, தேற்றுபதி பசுப
மூன்றுமென வறிவான் செப்புமெய் யப்பனுண்மை தெளித்தரு
செய் தானல். (௭

தெளிவுறநான் காச்சிரமஞ் சேர்ந்துலக முய்நூல் செப்புதரு
மேற்கொண்டு தெளித்தருளு முளத்தா, லளியமரும் பொழிற்கா
நகரிடைமுன் னிரண்டு மடுத்தநெறி சமிவனத்தி னமர்ந்திருந்து
ற்றி, விளிவரிய புகழ்மதுரா புரியிடைமெய்த் துறவே மேவியுமெ
போனடித்த விதத்தையுண ராதே, யளியுறுமெய் யப்பனைமா ல
னென்பா ருண்மை யவருரையுஞ் சிவனெனவே யறிவுறுத்த தன்

அறிவரிய பரசிவ சகமூன்று மித்தை யநாதிநித்தி யம்பி
மொன்றேயென் றோதிப், பிறிவருங்கூ டத்தனென்றோர் பொருளு
தென் பார்மெய் பேசுமுன்னா லுய்த்துணரார் பிரமமென்ப தே
னறைபரங்கூ டத்தனவ்வான் மாசகமா யையினு லாகுமிதோர்ந் து
மூன்று மநாதியென வோர்வா, னிறைவனெனைப் புரக்கவெமர் செ

றாளா துருக்கொண் டெழுந்தருண்மெய் யப்பனெமக் கினிதியம்பி
னால். (௭௬)

இயங்குசல தரவரனைக் கண்ணுற்றித் தோகை யிணர்தொடை
றதுமாரத் திடைமருவி முன்ன, ருயங்குதுய ரொழித்தமர்ந்து
லதயிலத் தியாண்டு மொருவாது வீற்றிருக்கு மொளிவடிவே வெங்
க, யிபம்புரைக்கொவ் வாதகுற மாதுகயங் கண்டாங் கெழின்மேனி
நீஇமருவு மியல்பதனைக் காட்டுந், தயங்குவளத் தமிழ்மதுரா புரிய
மெய்த் தாதை தாட்கமலம் வேட்கமல நீக்கமுறுமன்றே. (௭௭)

அன்றியெமைப் பலபவத்தி னடரும்வினைப் படர்நோ யலக்க
றநலக்கணரு ளளித்தருளி மேலும், பொன்றுதலில் சிவானந்தப்
ருவாழ்வு தருவான் புகழுலகு திகழ்மெய்யப்ப புனிதனெமக் கினி
, னன்றுணர்வீர் நமரங்கா ணடலைதரு மிடர்நோய் நலிவுறவுண்
லிவுறலென் றும்வறிது கேண்மி, னென்றுதவழ் நான்மாடக் கூட
டந் தேயவ் விறையடிக்கீழ் வரங்கிடப்போம் விரைந்தெழுதி ரா
(௭௮)

எழுதுகொடி யிடைமடவார் வான்றருவிற் சூழ வெறிகமழுங்கைப்
றியளியென் றேங்கியுளம் வாடுோர், பழுதுநணுகிற் றலெம் பத
லுக்கென் றோதும் படியோங்கு மணிமாடத் தமிழ்க்கூடற் பதி
ரெழுதகைமெய் யப்பனடித் துணைபரவிப் பணிந்து துன்பமொ
யின்பமுறத் துணிந்திலையான் முற்று, மிழிதகைய மடவார்குற்
வல்புரிக் துராமே யென்புகறித் திடுநாயின் மகிழ்ந்தனையீ தென்
(௭௯)

எஞ்செய்கோ வொருதமியே னென்றுகொள்வா ரின்றி யிடர்ப்
ம் கடைப்பிறப்பி னெண்ணிறந்த காலம், புன்செயலே புரிந்துண்
போதமுறா துலைந்தாற் பொய்யாத மெய்வாழ்விற் புகுந்திடுமா
வ, துன்செயலே கனகனிலார்த் துரிஇயருளல் வாளா வுற்றிடி
ன் பற்றுவா ருனையலதிங் குண்டோ, மின்செய்பொற்று மரையடி
புடமிடுபொன் போன்மெய் மிளிர்மெய்யப்ப பவக்குழியின் மேலு
ப் பெலம்விடே (௮௦)

## வேறு

விடமுறழு மைக்க ணங்கை மாரை யநுகியவர் பக்க னின்று
யூல்கொள் விதமினிய சொற்பு கன்று மேலை விழைவோரா, தனை
வுதவி ரற்ப வின்பை நாடி யகமுழுது முட்கி நொந்துவாடி யவதியுழ
விட்ட விஞ்சு பாவு விதியேநீ, கடிநிபவ னத்தி னின்று மேணி யெ
ருவறவ சித்தொ ழிந்தி டாத கதியருள்மெய் யப்ப னெந்தை பாத
முளமீதா, லடலரிய வெற்றி கொண்டு மேவ லினியரிது விட்ட கன்று
மீள்வ தமையுமென வுய்த்து ணர்ந்து போரவ தழகாமால். (அசு)

அழனடுவ ணற்பி னின்று மேனி லிடைமுகின்ம ழைப்பெய்
கின்ற காலை யசலமுற வுட்பு குந்து வாவி யதனூடே, யொழுகுபனி
யிற்ற ளர்ந்தி டாமல் வெறுவெளியி லுற்ற ருந்த வோவி யுடன்முழு
து மெற்பெ ழும்ப நீர்செய் தவமீதே, னழிவறுத வத்தி ரிந்த வரப்
மை யகமுறம திந்து ணர்ந்து கூட லமர்தருமெய் யப்ப னைக் குரு
னிடையேகா, வழுவறவ ழுத்தி யன்பி னேடும் வழிபடல்பி னித்தி
ருந்த மூல மலமொருவி நித்த வின்ப வாழ்வு பெறலாமே. (அஎ)

பெறலரிது சொர்க்க மென்று நாடி விதியின்வழி முத்த கங்கி
தேவர் பெறவவிவ ளர்த்த ணந்த கால முழல்வீர்கா, ளறைசிவனடிக்
க ணின்ப லாது பிறபொருட மக்களந்த வாயு ளனுகுதலு முற்ற ழிந்
து போத றிணமேயா, முறைமையிதனைத்தெ ளிந்து நீவிர் பலமுறை
செ னித்தி றந்திடாத முதமருணை றிக்க ணின்றுவாழ்மி னெனை
வோதர், வறிவருண்மெய் யப்ப னெந்தை பாத நிழல்விரிம னத்தர்
புன்க ணீடு மருவினைவெ துப்பொ ழிந்து சேர்வர் பெருவாழ்வே. ()

பெருவரைபி ளப்ப லந்த வேழு முகில்பொழிம ழைக்கு டைந்தி
டாது பிறைமுடியி டைக்கி டந்த நாலு பெயலேகா, வொருவறமொ ரு
க்கு சந்து வாயின் மயிர்நுழைவ றக்க விந்து மேன்மை யெடுகுடி
லெ னத்தி கழ்ந்த கூட னகர்மேயான், மருண்மலவ ழுக்க கன்று
போக வருள்றன்மு ழுக்கி யங்கி ரீயென் மடியிருவிநித்த வின்பமாகு
மமுதீயா, வருசகல ரைப்பு ரந்து தாயின் முறைதெரிமெய் யப்ப னெ
ந்தை பாத மலர்முடிமி சைப்பு னைந்துளோர்தம் வினைபோமே. [அசு]

வினைவழியே யமக்கு டம்பை யீச னருள்வதுகு ருக்கண் மூன்பி
றனம் விரிமலமி ரித்த மைந்து சால வொருதாளு, னொனுமுணர்வை
யிட்டி ருந்து வாழ்மெ யருள்விரவுதற்கி தின்றி வீணி லிடர்தருவி
னைப்பு ரிந்து மாய்வ தழகாமோ, சினமுறுப கைக்கொ ளுங்கை வாளி
னதுநனிசெ குத்த லன்றி யேவர் திரடமபு யத்த ரிந்து ளோர்க
ளுரையாய்நீ, மனமிதைய றத்தெளிந்து கூடல் வளநகர்மெய் யப்பன்
முன்பு மேவி வழிபடவி ழைத்தி யென்சொ லீது மறவாயால். ()

மறைசொல்பிர மத்தை யன்றி யேது முளவலவெ னப்பு கன்ற
ராவ மருவுயிர்த மக்கு வம்பி னேது மவர்நாமே, நிறைபரம மைந்த
விர்ந்து வேறி லெனவுரைபி தற்றி முன்பின் மாறு நிலைகொளவு ரை
க்கி ரண்டு நாச முளவாமா, றறைசொலின்வி ளக்கி யந்த கார மக
முறநெறிப்பர் நன்று வாய்மை யறிகிலர்பதிக்கு ளங்க ளோதி யுணா
ராதே, புறைபசும தத்த ரென்று தேற வுரைத நூலெப் யபப ரென்
றி றைலை முளமணிய மூத்து செம்பொ ளுமி துணர்வீரால். [அ௬]

உனைவுறநெ ருக்கி யுப்ப ராதி மனையுறவி டர்பப டிநது ரூமு
முடனுழவ வர்க்கி ரங்கி யேது முணராதே, பிணைவுறுந ரப்ப விழ்ந்து
வாயி னயலவர்ந னைத்த பஞ்சின் வாரி பிரிவிலர்மு னட்டவுண்ப தே
னுமிசையாதே, யினையுறுத மிட்டி ரங்கள் கூடி யுணர்வழிவ ருத்த
மிஞ்சு வேளை யெழில்வளர ருக்க னந்த சோடி நிசராவோர், பினை
மறிம முக்க ரம்பைஞ் ஞீல களம்விரிச டைக்க ணிநது மேனி பிரிவ
றமெய் யப்ப வென்க ணேர வருள்வாயால். [அ௭]

அருமைநவின றிக்க ணின்றி டாது கொடுவினைப லப்பு ரிந்த
பாவி யடர்மினிவ ளைத்த கைந்து பாச மதனூலே, முரிபடவி றுக்கி
யென்பு மோதி யுதையுமினெ னச்சி னந்து சேரு முரணிமப டர்க்கு
டைந்து சோர்த லனுநாமே, வரிகொள்க மலத்த மர்ந்த கோடு நியதி
கண்மு டித்தெ முந்து பார மருவுறுத வர்க்க ருந்த வீயு மனநேராம்,
விரிதடமி கட்பொ லிந்த கூட னகரமர்மெய் யப்ப நின்பொ னேயும்
விரைமலர டிப்பு குந்து வாழ நெறிதாராய். [அஅ]

நெறிகுழன்ம ணத்தை யன்று கீர னியல்பலசெ யற்கையென்று
கூறி நிலைகெடவி லக்க வந்து தானொர் புலவோனு, விறைவன தியற்

கையெண்ட சோதி மிடியுளகுருக்கண் மைந்த னோ விலகுபொன்மு
டிப்ப ரிந்த நீயு மதனோடே, நிறைமிகுகு ரத்தி யென்மெ ணுமன்
முதுமகன்ம னைப்பு குந்த பாவி நிலையழிய வெட்டி யங்க நீதி பிறழா
மே, நிறுவியம கத்து வங்கொள் கூட லமர்தருமெய் யப்ப னன்றி
யார்கொ ணிமிர்துபர கற்றி யின்ப மீயு மளியோரே. (௮௯)

அளியினமு டக்க ருப்பி னோடி ரதமுணநி ரைப்ப டிந்து வேள்
வி லமர்செயவ ளைத்து நின்ற பான்மை தரசீர்மே, லொளிர்குவளைபத்
ம மம்பின் மேல வுருவிலியு டற்ற வந்த தாக வுழவியர்மகிழ்த்து மூன்
கொ ளுடு லொருவரசீள், களிபுறவு ரத்த ணைந்த போது களமரவை
கட்கிறைஞ்சி வாழ்செப் கனலிமன்வ ளத்தி லங்குகூட னகர்வாழ்
வோய், வின்வரிய தந்து வங்கிதாண் ணூமெரு டறுபடிவ ழிக்கொடும்
பவேறி விரவுறமெப் யப்ப வொன்றி னேடு மருள்வாயே. [௯0]

வேறு

அருட்பரமுத் திரைமுடிவி னடியரிற்சேர்த் தருண்முறைமெய்
யப்ப னெம்மான், றிருப்பணிமுற் பலவியற்றிச் சரியாதி புரிந்துபின
ர்ச் சேக்கி ழார்வாய்த், தருக்குறுநாற் றொண்டர்குரு பூசைநிறீ இ,
இனந்தோறுந் தகைசா லந்நாற், பொருட்பெருக முகமலரப் புகன்
றேற்றி யெமக்குணரப் புணர்த்தி னனால். [௯௧]

புணர்முலையார்க் குடைந்துமனம் புண்ணாகி யென்னானுன் புக
ழொன் றேனு, மணவரிய வமுதுகம ருகுக்தாங்கு வாணாளையவமே
போக்கி, யெணவரிய துயர்பயக்கு மெரிநரகுக் காளாக விருக்கின்
றேனை, யிணர்மலர்ச்செங் கழூசீர்த்தா மெந்தாய்மெய் யப்ப நின்க
ணெடுத்தாள் வாயே. [௯௨]

வாயுனையே துதித்திடமெய் யப்பசெவி நின்புகழே யகிழ்ந்து
கேட்பச், சேயகலி யாணவருட் டிருமேனி கண் காணத் தேவ ரூர்
சேர், தூயமணிச் சிகரமதில் சுலாவுசின கரம்புகுந்து சூழ்ந்து போற்
றக், காயமுறத் தியானித்துக் கன்மனகன் மனமாகக் கருது வாயோ.

கருட்டியக்க மொழித்தகக்கண் கலந்தொன்றைக் காட்டுதின
கன்மெய்த் தாதை, யருட்டிருமெய் நாயன்மார்ப் பதிட்டைசெய்து
பூசைநிறீஇ யவலமார்க்கஞ் [illegible]

வாழ்வினிதருளிச் சுத்த மாயா, சிருட்டி திதி சங்காரந் திரோபவத் தா டனுக்கிரகச் செயல்பூண் டானால். [௯௪]

செய்யபர சிவனருண் மறைபாச முறன்முறையே செப்பி யோ …ச, வையெழுத்திற் பாநுவொளி கண்டப மிருளுவம னறைந்து மு …ரனை, யுய்யிரண்டும் பின்னடிவு பொருபொருண் மற் றிரண்டுமுயி ராடு பாச மையமறத் தெளிதிபெண்ற னருடருமெய்க் குரவனெம் …ா னவலந் தீர்ப்பான். [௯௫]

அவந்தருதுன் பகற்றுதற்கே யைந்தெழுத்தி லிரண்டகற்ற லத பின் சேர்த்தல், சிவந்தனையான் மாவருளாற றெரிந்துறுதற் காமெ …றுஞ் சேர்க்கு மந்தத், துவந்தருமக் காமிவைமுற் றுரத்துவன …வையென்றுந் சொல்லிச் சேர்நந்தார், பவநதெறுநல, வுபதேசம் …ளித்தருண்மெய்த் தாதைகழல் பணிந்து வாழ்வாம. [௯௬]

வாக்காலு மனத்தாலு மரையுரைதன் பதத்தாலு மலமுன்மாய் து, நோக்காலுங் கரத்தாலு நுவலரிய பரானந்த நுகரு போகங்கஞ், சா காதி பிறபிணிடைக் கடமாற தெமக்கருண்மெய்த் தாதைபாதந், …தக்காதர த்தினெஞ்சு சிந்தைசெய்பின் முந்தைவினை சிந்து மாலோ.

சிந்தைசெய்வார் மனத்தனியார் செங்கழுநீர் மனத்தனியார் திக …மெய்த் தாதை, வந்திரப்பார்க் ககத்தனியார் மருவாதா ரகத்தனி …யார் வபங்கு மோக்கம், புந்திபுறத தாடலைபார் புணர்பமெனமேவார்ந …டலையார் புகல வோதித், தந்திண்மைத் தாடலைபார் சாற்றுவர் …மெய்த் தாடலைபா தரித்து வாழ்வாம. [௯௮]

தரித்திடுசெங் கழுநீரோர் தாண்மலர்ச்செங் கழுநீரோர் சகலர்பாச, …ரித்திடுவாப் மைத்தாதைதிருமபொமின்னமைதகாதையிலங்குமா …சப், தாத்தினின்முன் றெரிபாமன் றபங்கமுன்னி றெரியாமற் …ன்னைக்காட்டி, வரததகுமெய யானந்த வாழ்வருண்மெய யானந்த …லர்த்தாள் போற்றி. [௯௯]

போற்றியோ மெய்க்குரவ பொழிந்தொழுகு கருணைமுகப்புண் டரீகம், போற்றியோ மெய்க்குரவ புன்மலமற் றிடப்பார்க்கும் புண் டரீகம், போற்றியோ மெய்க்குரவ பொய்பிணிப்ப தேசமருள் புண்ட …ரீகம், போற்றியோ மெய்க்குரவ புனிதவனபர் சிரமிகாண்மணிப் …புண்டரீகம். [௧௦௦]

முற்றிற்று.